**MINUTES OF THE PUBLIC HEARING MEETING FOR OBTAINING EVIRONMENTAL CLEARANCE FROM STATE ENVIRONMENT IMPACT ASSESSMENT AUTHORITY (SEIAA) – TAMIL NADU FOR THE PROPOSED BLACK GRANITE QUARRY OF M/S. TAMIL NADU MINERALS LIMITED, VEERANAM BLACK GRANITE QUARRY, OVER AN EXTENT OF 13.74.0 HECTARE LOCATED AT S.F.NOS. 74/(P), 126/1A, 127 AND 144/1 OF VEERANAM VILLAGE, THANDRAMPATTU TALUK, TIRUVANNAMALAI DISTRICT, CONDUCTED ON 22.08.2025 AT 11.00 AM IN M/S. SRI VENKATESHWARA THIRUMANA MAHAL, SATHANUR DAM ROAD, SATHANUR VILLAGE, THANDRAMPATTU TALUK, TIRUVANNAMALAI DISTRICT.**

Present:

| | | |
|---|---|---|
| 1. | Thiru. S. RajaKumar | Revenue Divisional Officer,<br>Tiruvannamalai. |
| 2. | Tmt. T. Kalaiselvi | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Tiruvannamalai District. |
| 3. | Thiru. V. Kathirvelan | Assistant Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Tiruvannamalai. |
| 4. | Dr. E. Ganesan | Manager,<br>TAMIN,<br>Chennai. |
| 5. | Thiru. C. Kathiravan | Manager,<br>TAMIN,<br>Villupuram. |
| 6. | Tmt. Salammal | Village Administrative Officer,<br>Veeranam,<br>Tiruvannamalai District. |
| 7. | Public and NGOs | 29 persons (list enclosed). |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai, on behalf of the Tamil Nadu Pollution Control Board welcomed the Revenue Divisional Officer, Tiruvannamalai who presided the public Hearing meeting, the Government officials, the public & the NGOs and explained the need of the Public Hearing for obtaining Environmental Clearance for the proposed Black granite quarry as follows.

"The public hearing meeting is being conducted for the proposed project of M/s. Tamil Nadu Minerals Limited, Veeranam Black Granite

Quarry, over an extent of 13.74.0 hectare in Veeranam Village, Thandrampattu Taluk, Tiruvannamalai District for obtaining prior Environmental Clearance from the State Environment Impact Assessment Authority (SEIAA) as per the Environmental Impact Assessment Notification 2006."

As per EIA Notification 2006, the mining projects (Individual or Cluster) having extent above 5 hectare requires prior Environmental Clearance from the State Environment Impact Assessment Authority. This public hearing meeting will be recorded and submitted in the form of audio and video to the State Environment Impact Assessment Authority. Accordingly, the public notice for this public hearing was published in dailies of "The Times of India" (English) & "Daily Thanthi" (Tamil) on 17.07.2025 with the approval of the District Collector, Tiruvannamalai for the proposed Black granite quarry of M/s. Tamil Nadu Minerals Limited, Veeranam Black Granite Quarry, which is to be conducted at M/s. Sri Venkateshwara Thirumana Mahal, on 22.08.2025 @ 11.00AM.

The District Environmental Engineer further stated that the project proponent will explain the proposed quarry project and its Environmental Impact Assessment Study report details through power point presentation. Following the presentation, the general public and NGOs can express their views, suggestions and comments on the said project one by one either in oral or in written format during when; the public should tell their name and their village name. The opinions & suggestions of the public & environmentalists will be recorded and submitted to the State Environment Impact Assessment Authority. Thereafter, the authority will consider the issue of Environmental Clearance to this proposed quarry. The Revenue Divisional Officer, Tiruvannamalai will inaugurate the public hearing meeting thereafter the project proponent will explain the Environmental Impact Assessment Study report."

The Revenue Divisional Officer, Tiruvannamalai requested the project proponent to explain about the proposed rough stone and gravel quarry and the Environmental Impact Assessment study conducted by them to the

public in detail and general public to mention their name and their village name while express their views, suggestions and comments on the said project.

Thiru. E. Ganesan, Manager, TAMIN explained the details of the project and the Environmental Impact Assessment study conducted by them through power point presentation.

Subsequently, the Revenue Divisional Officer, Tiruvannamalai requested the public to express their views/suggestions/comments in oral or written statement one by one.

The following are the views/suggestions/comments represented by the public.

**1. Public, Veeranam Village**

He stated, they are dumping all the waste here only. Those wastes are being fallen in our fields only. We can't even graze our cattle. The cattle run away screaming. Due to the trucks driving by, our crops are not growing properly. Our crops are not yielding well due to the deposition of dust, stone on the land. We're unable to cultivate the groundnut crop and we're incurring huge losses. This quarry is a great hindrance to the farmers. If you could ensure that the farmers are not disturbed, we would be very grateful. With that he concluded his speech.

**2. Thiru. Elumalai, Veeranam Village**

He stated, 'I'm a farmer. The operation of the Veeranam quarry is causing damage to our agricultural lands due to falling of stones and dust. The dust is affecting our lands, and also causing damage to water resources. Our neighboring farmers are struggling to get enough water to irrigate their crops. Due to the deep excavation by the quarry, our water resources are not sufficient. We request that you take appropriate action and grant permissions with proper documentation. We have no objection if it's done with proper procedures. I have heard that permission has been granted for sand mining near our agricultural lands. I request you to conduct an

enquiry and make a decision in this regard. With that, he concluded his speech.

**3. Thiru. Sathish, Veeranam Village**

He stated, 'Greetings to everyone. Welcome to all the government officials who have arrived. 15 years ago, we obtained stay order and stopped the quarrying operations in our village. The farmers in this village use to collect and remove the fallen stones from our lands very often. This caused significant air pollution. Now, they're saying they want to bring it back. They will transport the stones through roads, which can lead to accidents and will also affect our children. 15 years ago, we have already stopped the quarrying operations with a stay order. Bringing it back will affect our water bodies, and due to heavy rainfall, the lake bunds can breach at any time. You can't assure the safety for this. With that, he concluded his speech.

**4. Thiru. Manikandan, Veeranam Village**

He stated, 'Greetings to everyone. The Veeranam quarry has been a struggle for the people for a long time. For the past 20 years, they have been mining the stones from our village causing damage to the environment, and roads. All these activities shall be stopped immediately. I also request the unit authorities to rectify the damages caused in the roads and to protect the environment by planting trees.' With that, he concluded his speech.

**5. Thiru. Kuppan, Veeranam Village**

He stated, 'My agriculture land is located just adjacent to this quarry. We are cultivating crops here, and the crops are affected because of the dust emission. We are having a open well of 13 feet depth, If they will dig 200-300 feet depth, we will lead to face water scarcity. We don't want this stone quarry. With that, he concluded his speech.

**6.Thiru. Natraj, Veeranam Village**

He greeted everyone who has arrived. Our village is having a one lake of area 80 Acres and this Granite quarry is located downstream of this lake. Because of mining of stones from the quarry the bunds for the lake were disappeared. During heavy rainfall, the water from the lake flows to the Paddy agricultural lands of area 200-300 Acres. When they transport waste through earth roads the dust settles on our neighboring millet fields, affecting crop yields. The vehicles are moving fastly on earth road causing dust to settle on our millet fields, damaging crops like black gram. Please see how much damage is being done. Thank you.' With that, he concluded his speech.

**7. Thiru. Chandra Prakash, Veeranam Village**

He stated, 'I have worked in this quarry sector for 22 years. We had already closed this quarry when I was a child. We know how our village was before the operation of this granite quarry and we know how it is now. We were children then and now our village has developed. This quarry is located 300 meters distance from our village. If you run this quarry after obtaining permission, there won't be water for our next generation. Our village is facing water scarcity. After the closure of this quarry only, our village seems to be green. If the quarry will come into commission again, our water resources will be reduced. We'll have to leave our village with our children if the quarry resumes. Please stop this. If not, we will approach the District Collector and we have already approached the High Court. We will approach again. We don't want this quarry. I am working in a quarry in another village, but here, it will deplete our water resources. It's not necessary for our village, and it won't benefit us. Our village will be ruined. Please stop this. Thank you. With that, she concluded his speech.

**8. Tmt. Lakshmi, Veeranam Village**

She stated, 'They have encroached upon our patta land and mined stones from the quarry. She requested to remove the stones and restore the land so that we can cultivate crops. With that, she concluded his speech.

**9. Thiru. Arivazhagan, Environmentalist, Veeranam Village**

He stated, 'I'm from Sathanur village, which is part of the Veeranam union. The Public hearing meeting is being conducted here to grant permission to TAMIN. Through this meeting, we would like to express our opposition starting from the beginning of this project, which will affect the environment. As, Veeranam village has been facing numerous problems due to the granite quarry operated by TAMIN for the past 25 years. The villagers have suffered in all aspects, including loss of life, property, and livelihood. Agriculture will be severely affected. You have informed that you are going to operate the quarry at a depth of 100 feet, which will affect the groundwater table and irrigation sources. Most farmers here have open wells that are only 10-13 feet depth. If you are excavating deeply it will affect the water resources for agriculture. Already, there is one non-operational quarry which have obtained stay order from the High Court, and we request that you should not allow this quarry to operate in this area. We shouldn't allow the stone quarry to operate in this area again. Although the pollution control board says everything is fine, if the central and state governments take a closer look, they'll see that even in the current situation, people living within a 10-kilometer radius of this quarry are suffering from lung-related diseases due to environmental pollution. The pollution from the quarry has already caused health issues, including kidney stones. Similarly, you are destroying the natural resources of our village and implementing the thousand crores revenue government projects that do not benefit any of our surrounding villages. The mining of minerals will cause environmental damage and health hazards. We oppose the setting up of any granite quarry in Sathanur and Veeranam areas under any circumstances. We request that you don't grant environmental clearance for this project. Thank you.' With that, he concluded his speech.

**10. Thiru. Sathishkumar, Sathanur**

He stated, 'Arivu anna has spoken clearly about the quarry. This is a natural resource, and we are born here with this land. Excavating and taking of stones from here is like cutting and taking of our hands and legs. There's no doubt that it will cause immense damage. Instead of explosives, If you apply chemicals up to 15 feet depth and 5 feet width it will still harm the soil and environment and even the pollution control board knows how much damage it will cause. You're exploiting natural resources without utilizing human resources. Instead of mining stones and earning Rs. 50,000, we should use our human resources and youth to create employment opportunities. We should focus on sustainable development and not exploit natural resources. Our nation should completely drop the exploitation of natural resources. We should prioritize human resources and sustainable development over extracting natural resources. Nature is our livelihood, and we should protect it. Let's learn to live with nature instead of exploiting it. Thank you.' With that, he concluded his speech.

**11.Thiru. Gowtham, Veeranam Village**

He stated, 'We don't need a stone quarry in our village. The quarry causes significant noise pollution which will affect wildlife and environment. The explosives used by them pose a risk to human life, and there's also a risk of water scarcity. The quarry will lead to water pollution, air pollution, and noise pollution. Therefore, we don't need TAMIN in our village. Please don't allow the TAMIN company to operate a stone quarry in our village.' With that, he concluded his speech.

**12.Thiru. Raja, Veeranam Village**

He stated, 'We live near the quarry, and its impact is felt up to 2 kilometers away. We know the effects because we too drive vehicles. Please don't install crushers or mine granite. Agriculture is already suffering. Due to the lake work, laborers are not available, and farming is running at a loss. We planted four crops, but all four were affected. After the lake work started, laborers aren't coming. How will farmers survive if this continues? Please make a good decision. We've already submitted multiple petitions.

They are riding harssely near the lake and temple. If this continues, the country will be ruined. I've sent many petitions, including to Tiruvannamalai and Chennai, but there's no use. Only those with influential power get respect. With that, he concluded his speech

**13.Thiru. Chandrakasan, Veeranam Village**

He stated, 'We don't need the Veeranam stone quarry. It won't benefit us even a single rupee, but it will ruin our village. We don't need this quarry, as it won't bring us any profit. They're earning crore and crores of rupees from our village, but they've never done any welfare for our village. They only care about their profits. We can't even cultivate crops properly. If you could provide us with protection to maintain our crops, it would be great. This quarry will affect agriculture. Please take necessary steps to prevent the quarry from operating.' With that, he concluded his speech.

**The following 1 no. of the public have expressed their opinion in writing on the proposal of this Rough stone quarry.**

| S.No | Name& Place | Comment |
|---|---|---|
| 1. | Village People,<br>Veeranam,<br>Tiruvannamalai. | Expressed opposition to the proposed quarry |

As there were no views/comments raised further, District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai, with the approval of Revenue Divisional Officer, Tiruvannamalai, has announced that the meeting came to an end with the vote of thanks.

**Enclosures:**

1. Copy of press release (Public Notice published in the daily Newspaper Tamil & English dated 17.07.2025 for notifying the public hearing meeting)
2. The certificate issued by the Village Administrative Office for the Audio announcement and issue of notices.
3. Attendance sheet at the public hearing (13 pages/29 persons).

4. Audio & Video (DVD – Disc 1) of the public hearing proceedings.
5. Photographs of the public hearing/Summary in English & Tamil, submitted by the Project Proponent.
6. EIA Report & Executive summary (Tamil & English).

**District Environmental Engineer,**
**Tamil Nadu Pollution Control Board,**
**Tiruvannamalai.**

**Revenue Divisional Officer,**
(4/6) **Tiruvannamalai.**

**திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு வட்டம், வீரணம் கிராமம், புல எண்கள். 74/(P), 126/1A, 127 & 144/1 –ல் 13.74.0 ஹெக்டேர் பரப்பளவில் உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். தமிழ்நாடு மினரல்ஸ் லிமிடெட் வீரணம் கருப்புக் கிரானைட் குவாரி சுரங்கத்திற்கு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு 22.08.2025 அன்று திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு வட்டம், சாத்தனூர் டேம் சாலையில் அமைந்துள்ள தி/ள். ஸ்ரீ வெங்கடேஸ்வரா திருமண மஹாலில் காலை 11.00 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புரை கூட்ட அறிக்கை விபரங்கள்.**

**பங்கேற்றோர்:**

**திருவாளர்கள்**

| | | |
|---|---|---|
| 1. | திரு. S. ராஜகுமார் | வருவாய் கோட்ட அலுவலர்,<br>திருவண்ணாமலை. |
| 2. | திருமதி. தி. கலைச்செல்வி | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருவண்ணாமலை மாவட்டம். |
| 3. | திரு. வா. கதிர்வேலன் | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருவண்ணாமலை. |
| 4. | முனைவர். E. கணேசன் | மேலாளர்,<br>TAMIN,<br>சென்னை. |
| 5. | திரு. C. கதிரவன் | மேலாளர்,<br>TAMIN,<br>விழுப்புரம். |
| 6. | திரு. சாலம்மாள் | கிராம நிர்வாக அலுவலர்,<br>வீரணம்,<br>திருவண்ணாமலை மாவட்டம். |
| 7. | பொதுமக்கள் மற்றும்<br>சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் | (29 நபர்களின் பட்டியல்<br>இணைக்கப்பட்டுள்ளது) |

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்கள் பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு தலைமை வகித்த வருவாய் கோட்ட அலுவலர், திருவண்ணாமலை அவர்களையும், கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு வருகை புரிந்த அரசு

அதிகாரிகளையும், பங்கேற்ற பொதுமக்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் அனைவரையும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சார்பாக வரவேற்று உத்தேசிக்கப்பட்டுள்ள கருப்புக் கிரானைட் குவாரிக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டத்தின் அவசியத்தை பின்வருமாறு எடுத்துரைத்தார்.

"திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு வட்டம், வீரணம் கிராமத்தில், 13.74.0 ஹெக்டேர் பரப்பளவில் உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். தமிழ்நாடு மினரல்ஸ் லிமிடெட் வீரணம் கருப்புக் கிரானைட் குவாரி சுரங்க நிறுவனமானது பாறையிலிருந்து கற்களை வெட்டி எடுக்க மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டம் இன்று நடைபெறுகிறது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை 2006-ன்படி தனியாகவோ அல்லது கூட்டாகவோ 5.00 ஹெக்டர் பரப்பளவிற்கு மேல் பாறையிலிருந்து கற்களை வெட்டி எடுப்பதற்கு சுற்றுச்சூழல் அனுமதி பெற பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டம் நடத்தி பொதுமக்கள் மற்றும் சமூக நல ஆர்வலர்களிடம் கருத்துகளை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ பெற்று அதனை ஒலி மற்றும் ஒளி பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்ப வேண்டியது அவசியமாகும். இதுதொடர்பாக மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலின்படி தி/ள். தமிழ்நாடு மினரல்ஸ் லிமிடெட் வீரணம் கருப்புக் கிரானைட் குவாரி சுரங்க குவாரிக்கு பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் தி/ள். ஸ்ரீ வெங்கடேஸ்வரா திருமண மஹாலில் 22.08.2025 அன்று காலை 11.00 மணியளவில் நடைபெறுமென தினத்தந்தி மற்றும் தி டைம்ஸ் ஆப் இந்தியா செய்தி தாள்களில் 17.07.2025 அன்று பொது அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இக்கூட்டத்தில் தொழிற்சாலை நிர்வாகத்தினர் தொடங்க உள்ள தொழிற்திட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு சம்பந்தமான விவரங்களை தங்களுக்கு விரிவாக எடுத்துரைப்பார்கள். அதன் பின்னர் பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் தங்களது கருத்துகளை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி

மூலமாகவோ தெரிவிக்கலாம். அவ்வாறு தெரிவிக்கும் போது பொதுமக்கள் தங்கள் பெயர், ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை தெரிவிக்க வேண்டும். தங்களுடைய கருத்துக்களை முறையாக பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும். அதன் பின்னர் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தினர் இத்திட்டத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவது குறித்து பரிசீலனை செய்வார்கள். தற்போது வருவாய் கோட்ட அலுவலர், திருவண்ணாமலை அவர்கள் பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தினை தொடங்கி வைப்பார்கள். அதன் பின்னர் தொழிற்சாலை நிர்வாகத்தினர் தொழிற்திட்டம் குறித்தும் நிர்வாகத்தினரால் தயாரிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை குறித்தும் தங்களுக்கு விரிவாக எடுத்துரைப்பார்கள்"

வருவாய் கோட்ட அலுவலர், திருவண்ணாமலை அவர்கள் சுரங்க நிர்வாகத்தினரை உத்தேசிக்கப்பட்டுள்ள தொழிற்திட்டம் குறித்தும் நிர்வாகத்தினரால் தயாரிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை குறித்தும் பொதுமக்களுக்கு விளக்கும் படி கேட்டுக்கொண்டார். மேலும் பொது மக்கள் கருத்து தெரிவிக்கும் போது தங்கள் பெயர் மற்றும் ஊரின் பெயர் குறிப்பிட்டு கருத்து தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து திரு. E. கணேசன், மேலாளர், TAMIN, சென்னை அவர்கள் நிழற்பட விளக்கக் காட்சி மூலம் உத்தேசிக்கப்பட்டுள்ள தொழிற்திட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

பின்னர், வருவாய் கோட்ட அலுவலர், திருவண்ணாமலை அவர்கள், பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை தெரிவிக்கலாம் என்று தெரிவித்தார். அதன்படி பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை கீழ்க்கண்டவாறு தெரிவித்தனர்.

**1. பொதுமக்கள், வீரணம் கிராமம்**

இவர் கூறுகையில், கழிவுகள் அனைத்தும் எடுத்து வந்து கொட்டுகிறார்கள். அந்த கழிவுகள் எங்கள் கொல்லையில்தான் வந்து விழுகிறது. மாடுகளை மேய்க்க முடியவில்லை. மாடுகள் கத்திக் கொண்டு ஓடுகிறது. அவர்கள் ஜாக்கி ஓட்டுவதால் பயிர்கள் ஒழுங்காக விளையவில்லை. தூசிகள் படிவதால் நிலங்களில் கல் மண் ஒட்டிக் கொண்டு பயிர்கள் விளைச்சல் இல்லை. மணிலா போட்டு பயிர் செய்ய முடியவில்லை. மிகவும் நஷ்டம் ஏற்படுகிறது. இந்த குவாரி வருவதால் விவசாயிகளுக்கு மிகவும் இடையூறாக இருக்கிறது. விவசாயிகளுக்கு இடையூறு இல்லாமல் செய்து கொடுத்தால் மிகவும் நன்றி என்று கூறி தனது உரையை முடித்துக் கொண்டார்.

**2. திரு. ஏழுமலை, வீரணம் கிராமம்**

இவர் கூறுகையில், நான் ஒரு விவசாயி. வீரணம் குவாரி இயங்குவதால் விவசாய நிலங்களில் கற்கள் பட்டு விவசாய நிலம் மிகவும் சேதம் அடைகிறது. தூசிகள் எல்லாம் பட்டு விவசாய நிலங்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறது. அதுபோக நீர் வள பாதிப்பும் உண்டாகிறது. அக்கம் பக்கம் கதிர்களை வெட்டுவதற்கு நீர் வளம் பற்றவில்லை. இவர்கள் ஆழமாக பள்ளம் எடுப்பதால் விவசாயத்திற்கு நீர் வளம் பற்றவில்லை. இதற்கு தகுந்த நடவடிக்கை எடுத்து ஆதாரங்களுடன் அனுமதி கொடுக்கலாம் அதற்கு எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. எங்கள் விவசாய நிலத்திற்கு பக்கத்தில் கிரஷர்களுக்கு மணல் எடுப்பதற்கு அனுமதி கொடுத்து இருப்பதாக கேள்விப்பட்டேன் அதற்கு ஒரு விசாரணை மேற்கொண்டு ஒரு முடிவு சொல்லுங்கள் என்று கூறி தனது உரையை முடித்துக் கொண்டார்.

**3. திரு. சதீஷ், வீரணம் கிராமம்**

இவர் கூறுகையில், அனைவருக்கும் வணக்கம். வருகை புரிந்திருக்கும் அரசு அதிகாரிகள் அனைவருக்கும் வணக்கம். 15 வருடத்திற்கு முன்பு எங்கள் கிராமத்தில் இருந்த குவாரிகளுக்கு ஸ்டே ஆர்டர் வாங்கி நிறுத்தி

வைத்துள்ளோம். இங்கிருந்த பாறைகளில் இருந்து விழும் கற்களை எல்லாம் எடுத்து பொறுக்கி போடுவதே இங்கிருந்த விவசாயிகளுக்கு வேலையாக இருந்தது. இதனால் காற்று மாசு மிகவும் பாதிப்படைந்து இருந்தது. இவர்கள் திரும்பவும் இதனைக் கொண்டு வர வேண்டும் என்று சொல்கிறார்கள். அவர்கள் கற்களை சாலை வழியாகத்தான் எடுத்து வருவார்கள். சாலை வழியாக வரும் பொழுது என்ன வேண்டுமானாலும் நடக்கலாம். குழந்தைகளுக்கும் பாதிப்பு ஏற்படும். இங்கு 15 வருடத்திற்கு முன்பே குவாரிகளை ஸ்டே ஆர்டர் வாங்கி நிறுத்தி வைத்துள்ளோம். அதனை திரும்பவும் கொண்டு வருவதால் நீர்நிலைகள் பேரிடர் காரணமாக நிறைய மழை வருவதால் இந்த ஏரியின் கரை எப்பொழுது வேண்டுமானாலும் உடைந்து கொண்டு வரலாம். இதற்கு உங்களால் எந்த ஒரு உறுதி தன்மையும் கொடுக்க முடியாது என்று கூறி தனது உரையை முடித்துக் கொண்டார்.

**4. திரு. மணிகண்டன், வீரணம் கிராமம்**

இவர் கூறுகையில், அனைவருக்கும் வணக்கம். இந்த வீரணம் கல் குவாரி மக்கள் அனைவருக்கும் போராட்டமாகவே இருக்கிறது. இவர்கள் 20 ஆண்டுகளுக்கு மேலாக நமது ஊரில் கல் எடுத்திருக்கிறார்கள். இவர்கள் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தி பள்ளம் எடுத்து சாலைகள் எதுவும் சரி இல்லாதவாறு பாதிப்பு ஏற்படுத்தி இருக்கிறார்கள். இதை அனைத்தையுமே இத்துடன் தடை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். இவர்கள் எடுத்திருக்கும் பள்ளங்கள் அனைத்தையும் மூடிவிட்டு, மரங்கள் நட்டு சுற்றுச்சூழலை சரி செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன் என்று கூறி தனது உரையை முடித்துக் கொண்டார்.

**5. திரு. குப்பன், வீரணம் கிராமம்**

இவர் கூறுகையில், குவாரிக்கு பக்கத்தில் தான் என் கொல்லை இருக்கிறது. பயிர் வைத்திருக்கிறோம், அதில் புகை வந்து அடிப்பதால் எங்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறது. நாங்கள் 13 அடி தான் கிணறு எடுத்து வைத்திருக்கிறோம். இவர்கள் 200, 300 அடி ஆழம் எடுத்துச் சென்றார்கள் என்றால் எங்களுக்கு

தண்ணீருக்கு பற்றாக்குறை ஏற்படும். இந்த கல்குவாரி எங்களுக்கு வேண்டாம் என்று கூறி தனது உரையை முடித்துக் கொண்டார்.

**6. திரு. நடராஜ், வீரணம் கிராமம்**

இவர் கூறுகையில், இங்கு வருகை புரிந்திருக்கும் அனைவருக்கும் நன்றி. எங்கள் ஊரில் 80 ஏக்கர் பரப்பளவில் ஏரி ஒன்று இருக்கிறது. ஏரியின் அடி ஓரத்தில் தான் இந்த கிரானைட் கல்குவாரி இருக்கிறது. கற்களை எல்லாம் வெட்டி எடுத்துவிட்டு ஏரிக்கு கரை இல்லாமல் போய்விட்டது. தண்ணீர் அதிகமாக வரும் வேளையில் ஏரியின் நீர் அனைத்தும் 200, 300 ஏக்கர் கழனி காடுகள் நெல் விளையக்கூடிய நிலப்பரப்பில் வந்துவிடுகிறது. இவர்கள் கழிவுகளை ஏற்றி செல்லும் பொழுது மண் சாலையில் இருக்கும் மண்கள் எல்லாம் எங்கள் பக்கத்து சிறுதானிய நிலங்களில் தூசி படிந்து விளைச்சல் இல்லாமல் போய்விடுகிறது. வண்டிகள் அனைத்தும் வேகமாக செல்கிறது. மண் சாலையில் தான் வண்டிகள் செல்கிறது அப்படி செல்லும் பொழுது மண்கள் அனைத்தும் எங்கள் சிறுதானிய நிலங்களில் தூசி பட்டு உளுந்து எத்தனை டன் விளைகிறது என்று பாருங்கள் அனைத்தும் பாதிப்படைகிறது. நன்றி என்று கூறி தனது உரையை முடித்துக் கொண்டார்.

**7. திரு. சந்திர பிரகாஷ், வீரணம் கிராமம்**

இவர் கூறுகையில், இந்த குவாரி துறையில் நான் 22 வருடமாக வேலை பார்த்து வந்திருக்கிறேன். நாங்கள் ஏற்கனவே நான் சின்ன பிள்ளையாக இருக்கும் பொழுதே இந்த குவாரி முடி வைத்திருக்கிறோம். இந்த கிரானைட் வருவதற்கு முன் எங்கள் கிராமம் எப்படி இருந்தது எங்களுக்கு தெரியும் இப்பொழுது எப்படி இருக்கிறது என்பதும் எங்களுக்கு தெரியும். அப்பொழுது நாங்கள் சின்ன குழந்தைகளாக இருந்தோம் இப்பொழுது எங்கள் ஊர் பெரியதாக ஆகிவிட்டது. இந்த குவாரி எங்கள் ஊரில் இருந்து 300 மீட்டர் தூரத்திலேயே இருக்கிறது. நீங்கள் அனுமதி வாங்கி வந்து குவாரி செய்தீர்கள் என்றால் எங்கள் அடுத்த தலைமுறைக்கு தண்ணீர் இருக்காது. இப்பொழுது எங்கள் ஊரில் தண்ணீர் இல்லை. இதனை நிறுத்திய பின்பு தான் எங்கள் ஊர் பசுமையாக இருக்கிறது.

இதனை மீண்டும் ஆரம்பித்தால் எங்களுக்கு தண்ணீர் வளம் மிகவும் குறைந்துவிடும். மீண்டும் ஆரம்பித்தால் நாங்கள் எங்கள் பிள்ளைகள் அனைவரும் ஊரினை காலி செய்துவிட்டு தான் செல்ல வேண்டும். தயவுசெய்து இதனை நிறுத்தி விடுங்கள். இல்லை என்றால் நாங்கள் மாவட்ட ஆட்சியரை அணுகுவோம். ஏற்கனவே நாங்கள் இதனை ஐகோர்ட் வரை சந்தித்து இருக்கிறோம். மீண்டும் சந்திப்போம். எங்களுக்கு இந்த குவாரி வேண்டாம். நான் வெளியூரில் குவாரியில் வேலை செய்து வருகிறேன். இங்கு செய்தால் எங்கள் நீர் வளம் குறைந்து விடும். எங்கள் ஊருக்கு அவசியம் இல்லை. எங்கள் ஊருக்கு எந்த ஒரு லாபமும் இல்லை. எங்கள் ஊர் வீணாகிவிடும். அதை மட்டும் கொஞ்சம் தடை செய்யுங்கள். நன்றி என்று கூறி தனது உரையை முடித்துக் கொண்டார்.

**8. திருமதி. லஷ்மி, வீரணம் கிராமம்**

இவர் கூறுகையில், எங்கள் பட்டா நிலத்தினை ஆக்கிரமிப்பு செய்து கல்குவாரியில் கல் எடுத்து இருகிறார்கள். அந்த கற்களை எல்லாம் சுத்தம் செய்து பயிர் வைக்கும் வகையில் செய்து தர வேண்டும் என்று கூறி தனது உரையை முடித்துக் கொண்டார்.

**9. திரு. அறிவழகன், சுற்றுச்சூழல் ஆர்வலர், வீரணம் கிராமம்**

இவர் கூறுகையில், நான் இந்த வீரணம் கிராமத்தை ஒன்றியுள்ள சாத்தனூர் கிராமத்தைச் சேர்ந்தவர். இந்த தமிழக அரசு தற்போது கனிமவள நிறுவனத்திற்கு அனுமதி வழங்குவதற்காக கருத்துக்கணிப்பு கூட்டம் நடக்கிறது. இந்த கூட்டத்தின் வாயிலாக தெரிவிக்கிறோம். இங்கு சுற்றுச்சூழல் பாதிப்பை ஏற்படுத்தும் இந்த திட்டத்தை இங்கு செயல்படுத்தக்கூடாது என்று ஆரம்ப நிலையில் இங்கே எதிர்ப்பு தெரிவித்து இருக்கிறோம். காரணம் சொல்லப்போனால் கடந்த 25 ஆண்டு காலமாக வீரணம் கிராமத்தில் TAMIN மூலமா கிரானைட் கல் குவாரி நடத்தப்பட்டதிலிருந்து இந்த கிராமங்கள் சந்திக்காத பிரச்சினைகளே கிடையாது. அனைத்து வகையிலும் இந்த கிராம மக்கள் பொதுமக்கள் உயிர் உடைமை மற்றும் விவசாய பாகுபாடு மொத்த எல்லாமே பாதிக்கப்பட்டு

இருக்கிறார்கள். அதனால் விவசாயத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும். நீங்கள் 30 மீட்டர் அளவுள்ள இந்த கல்குவாரியை நீங்கள் செயல்படுத்துவோம்னு சொல்றீங்க கிட்டத்தட்ட 100 அடி ஆழம் நீங்கள் இந்த கல்குவாரி எடுக்கிறது மூலம், விவசாய பாதிக்கிறது. நீங்க அதிகப்படியான ஆழத்தை எடுத்துச் செல்லும் பொழுது அந்த விவசாய பாசனத்திற்கான நீர் பாதிக்கப்படும். எங்கள் விவசாயம் பாதிக்கும். அதே போல ஏற்கனவே உயர் நீதிமன்றத்தின் தடை ஆணை பெற்று அங்கு செயல்படுத்தாமல் கல்குவாரி இருக்கிறது. மீண்டும் இந்த பகுதியில் இந்த கல்குவாரி செயல்பட அனுமதிக்க கூடாது. இதன் காரணமாக ஏற்கனவே எங்கள் பகுதி மாசு கட்டுப்பாட்டு வாரியத்தில் எல்லாமே சரியாக இருக்கிறது சொல்றீங்க, ஆனால் உன்னிப்பாக மத்திய அரசுகளும் சரி தமிழக அரசும் கவனித்தால் தற்போது உள்ள நிலையிலேயே கிட்டத்தட்ட இந்த பகுதி சுத்தி வட்டாரம் 10 கிலோமீட்டர் அளவிலே வசிக்கிற அனைத்து மக்களுக்கும் சுற்றுச்சூழல் பாதிப்பின் காரணமாக நுரையீரல் சம்பந்தப்பட்ட வியாதிகள் வந்து கொண்டிருக்கிறது. அதிகப்படியான ஸ்டோன்ஸ் அதாவது உடல் ரீதியான நீர் மாசுபாடு ஏற்பட்டு நிறைய பேர் சிறுநீரக கற்களால் பாதிப்பு ஏற்பட்டு அவதிப்பட்டு கொண்டிருக்கிறார்கள். அதனால் உடல் பாதிப்பு ஏற்படுகிறது. மக்களுக்கான சுகாதாரக் கேடு ஏற்படுவது, அதேபோல நீங்கள் ஆயிரக்கணக்கான கோடிக்கணக்கான ரூபாய்க்கான கனிம வளங்களை நீங்கள் எங்களுடைய கிராமத்தில் இருந்து இயற்கை வளங்களை அழித்து அரசாங்கத்திற்கு திட்டங்களை செயல்படுத்துவது மூலமாக எங்கள் சுற்றியுள்ள எந்தவொரு கிராமத்திற்கும் பயன் கிடையாது. அதனால் நீங்கள் இந்த பகுதியில் சாத்தனூர் மற்றும் வீரணம் இந்த பகுதியில எந்த ஒரு சூழலிலும் எந்த ஒரு கிரானைட் கல் குவாரியும் வரும் காலங்களில் அமைப்பதற்கு எதிர்ப்பை தெரிவிக்கிறோம். அதனால் இந்த சுற்றுச்சூழல் அனுமதி நீங்கள் வழங்க கூடாது. நன்றி வணக்கம் என்று கூறி தனது உரையை முடித்துக் கொண்டார்.

**10. திரு. சதீஷ்குமார், சாத்தனூர்**

இவர் கூறுகையில், கல்குவாரி பற்றி அறிவு அண்ணன் அவர்கள் எல்லாமே தெளிவாக பேசிவிட்டார். இது இயற்கை வளம் நாங்கள் இங்கு பிறந்தது அந்த கல் மண்ணோடு தான் நாங்கள் பிறந்திருக்கிறோம். அதை எடுத்துக் கொண்டு போகிறீர்கள் என்றால் எங்கள் கை காலினை வெட்டி எடுத்து கொண்டு போவதற்கு சமம். அந்த அளவுக்கு அதில் பாதிப்பு இருக்கிறது. ஒரு சந்தேகமும் கிடையாது. வெடி மருந்து இல்லாமல் நீங்கள் ஒரு கெமிக்கல் பயன்படுத்துகிறீர்கள் என்றால் அது எப்படி 15 அடிக்கு ஆழத்திற்கும் ஐந்தடி அகலத்திற்கும் அந்த ரசாயனத்தினை போடும் பொழுது மண்ணில் எவ்வளவு பாதிப்பு ஏற்படும் என்பது மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திற்கு தெரிந்திருக்கும். இந்த திட்டங்களை எல்லாம் செயல்படுத்தி விட்டு மனித வளத்தை பயன்படுத்தாமல் இருக்கிற மரங்களை இயற்கை வளத்தை மட்டும் தோண்டி எடுத்து செங்கல் செய்து வெளியே அனுப்பி விட்டு எங்களை சுடுகாட்டில் தான் வாழ வைப்பீர்கள். எனக்கு வயது 58 ஆகிறது நான் பிறந்ததில் இருந்த முருங்கை மரம் வளம் எல்லாம் இப்பொழுது இல்லை. இங்கு என்ன பிரச்சனை என்றால் மனித வளத்தை பயன்படுத்தாமல் இயற்கை வளத்தை மட்டும் எடுத்துக் கொள்கிறார்கள். இங்கு இருக்கிற இளைஞர்களுக்கு ஒரு நல்ல வேலை வாய்ப்பு ஏற்படுத்த வேண்டும். இளைஞர்களது உடல் திறனையும் உடல் உழைப்பையும் அவர்களது அறிவுத்திறத்திற்கு ஏற்ப தொழில் சார்ந்த திட்டங்களை ஏற்படுத்த வேண்டும். இங்குள்ள கருங்கற்களை எடுத்துக்கொண்டு 5000, 50000 ரூபாய் வரைக்கும் சம்பாதிப்பதற்கு பதிலாக ஒரே நாளில் 5000, 50000 ரூபாய் வரை சம்பாதிப்பதற்குண்டான இளைஞர்கள் வாழும் மனித வளம் இந்த ஊரில் இருக்கிறது. அதை பயன்படுத்தினால் நன்றாக இருக்கும். இந்த திட்டத்தினை எல்லாம் சுத்தமாக கைவிட்டு விடுங்கள். இயற்கை வளத்தை தோண்டி எடுப்பதனை முதலில் இந்தியா முழுவதும் கைவிட வேண்டும். ஏனென்றால் இயற்கை வேளாண்மையில் இருக்கின்ற நீரினை சரியான முறையில் உபயோகிக்க முடியவில்லை. இது அதிகாரிகள் அனைவருக்கும் தெரியும். இதை மட்டும் பேச வேண்டும் என்றால், அதிகாரிகள் அனைவருக்கும் தெரிந்த விஷயம்

தான். இதைப் பற்றி நான் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் பேசலாம். இயற்கையை தொடாதீர்கள் இயற்கை தான் எங்களோட வாழ்வாதாரம் அனைவரது வாழ்வாதாரமும் இயற்கை தான். கல் தானே என்று அனைத்தையும் எடுத்து விட்டால் பின்பு கல் இருந்திருக்கலாம் என்ற எண்ணம் ஏற்படும். ஒன்றை எடுத்து காணாமல் செய்து விட்டு அதற்குப் பின் அதைத் தேடுவதைவிட இருப்பதனை அப்படியே வைத்துவிட்டு அதனுடன் எப்படி வாழ்வது என்பதனை மட்டும் சரியாக வாழ்வோம். நன்றி என்று கூறி தனது உரையை முடித்துக் கொண்டார்.

**11. திரு. கௌதம், வீரணம் கிராமம்**

இவர் கூறுகையில், எங்கள் ஊருக்கு கல்குவாரி தேவையில்லை. கல்குவாரியினால் மிகவும் ஒலி மாசுபாடு ஏற்படுகிறது. இதனால் வனவிலங்குகள் மிகவும் பாதிப்படைகிறது. இந்த கல்குவாரியினால் சுற்றுச்சூழல் மிகவும் பாதிப்படைகிறது. இவர்கள் வைக்கும் வெடி மருந்தினால் மனிதர்களுக்கு ஆபத்து ஏற்பட நேரிடும். தண்ணீர் பற்றாக்குறையும் ஏற்படும். இந்த குவாரியினால் நீர் மாசுபாடு, காற்று மாசுபாடு, ஒலி மாசுபாடு அனைத்தும் ஏற்படுகிறது. அதனால் எங்கள் ஊருக்கு இந்த TAMIN தேவையில்லை. தயவுசெய்து இந்த TAMIN நிறுவனத்தை எங்கள் ஊரில் கல்குவாரி எடுக்க அனுமதிக்க வேண்டாம். நன்றி என்று கூறி தனது உரையை முடித்துக் கொண்டார்.

**12. திரு. ராஜா, வீரணம் கிராமம்**

இவர் கூறுகையில், நாங்கள் குவாரிக்கு பக்கத்தில் தான் இருக்கிறோம். இரண்டு கிலோமீட்டர் தூரம் வரை அதன் பாதிப்பு இருக்கும். ஏனென்றால், நாங்களும் வண்டி தான் ஓட்டுகிறோம் எங்களுக்கு தெரியும். தயவு செய்து ஜல்லி மெஷின் போடாதீர்கள். கிரானைட் கல் எடுக்காதீர்கள். விவசாயம் அனைத்தும் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறது. ஏரி வேலை வந்ததால் கூலி ஆட்கள் வருவதில்லை. அதனால் விவசாயம் நஷ்டத்தில் தான் செல்கிறது. நான்கு பயிர் வைத்தால் நான்கு பயிறுமே அடி வாங்கிவிட்டது. இந்த ஏரி வேலை வந்த பிறகு தான் கூலி ஆட்கள் யாரும் வருவதில்லை. இப்படியே இருந்தால் விவசாயிகள் எப்படி பிழைப்பது. நல்ல முடிவாக எடுங்கள். நாங்களும் மனுக்கு மேல் மனு

அனுப்பி விட்டோம். ஏரி பக்கம் வந்தாலும் வளைத்து வளைத்து ஓட்டுகிறார்கள். கோயில் பக்கமும் வளைத்து ஓட்டுகிறார்கள். இப்படி இருந்தால் நாடு சுடுகாடாகத்தான் ஆகும். மனுக்கள் நிறைய அனுப்பி இருக்கிறேன். திருவண்ணாமலைக்கும் அனுப்பியிருக்கிறேன். சென்னைக்கு அனுப்பியும் ஒரு பயனும் இல்லை. ஆள் பலம் இருப்பவர்களுக்கு தான் மரியாதை இருக்கிறது என்று கூறி தனது உரையை முடித்துக் கொண்டார்.

**13. திரு. M. சந்திரகாசன், வீரணம் கிராமம்**

இவர் கூறுகையில், இந்த வீரணம் கல்குவாரி எங்களுக்கு தேவை இல்லை. அதனால் எங்களுக்கு ஒரு ரூபாய் கூட லாபம் கிடையாது. ஊருக்கு தான் அழிவு. இந்த கல்குவாரி எங்களுக்கு தேவை இல்லை. இந்த குவாரியினால் ஒரு ரூபாய் கூட லாபம் இல்லை. எங்கள் ஊருக்கு வருகிறார்கள் கோடி கோடியாக சம்பாதித்து எடுத்து செல்கிறார்கள். ஆனால் எங்கள் ஊருக்கு ஒரு நல்லதும் செய்தது கிடையாது. அவர்கள் லாபத்தை தான் அவர்கள் பார்க்கிறார்கள். ஒரு பயிறும் வைக்க முடியவில்லை. நீங்கள் பயிர்களை பராமரிக்க எங்களுக்கு பாதுகாப்பாக இருந்தால் நன்றாக இருக்கும். இந்த குவாரியினால் விவசாயம் தான் பாதிக்கும். தயவு செய்து இந்த குவாரி வராமல் இருக்க நடவடிக்கை எடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**கீழ்கண்ட 1 நபர் எழுத்துமூலமாக இக்குவாரி அமைவது குறித்த தங்களின் கருத்துகளை தெரிவித்தனர்.**

| வ. எண் | பெயர் மற்றும் ஊர் | கருத்து |
|---|---|---|
| 1. | கிராமப் பொதுமக்கள்,<br>வீரணம்,<br>திருவண்ணாமலை. | இத்திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளார் |

பின்னர் கருத்துக்கள் எதுவும் பெறப்படாததால், வருவாய் கோட்ட அலுவலர், திருவண்ணாமலை அவர்களின் ஒப்புதலுடன் இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்து கூட்டம் நிறைவு பெறுவதாக மாவட்ட

சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்கள் அறிவித்தார்.

**<u>இதுதவிர கீழ்கண்ட விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.</u>**

1. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்ட விவரம் பத்திரிக்கை வெளியீட்டின் நகல் (தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளேடுகள், நாள். 17.07.2025).
2. துண்டு பிரசுரம் மற்றும் தண்டோரா அறிவிப்பு – கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்ட சான்று.
3. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு கலந்து கொண்டர்களின் வருகை பதிவேடு (13 பக்கங்கள்/29 நபர்கள்)
4. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் குறுந்தகடு (DVD).
5. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு.
6. திட்ட நிறுவனத்தாரால் சமர்பிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை மற்றும் திட்ட சுருக்கம் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,**
**திருவண்ணாமலை**

**வருவாய் கோட்ட அலுவலர்,**
(2/6) **திருவண்ணாமலை,**